
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1157

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

54

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



ஓவியம் : சிகரன்

# உடையார்பாளையத்தின் உந்துசக்தி வேலாயுதம்!

**சு**யமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டில் நாம் இருக்கிறோம். இந்த நூற்றாண்டு கால பயணம் தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார-பண்பாட்டு வளர்ச்சிக்கான பாதையை அமைத்திருக்கிறது. ஒவ்வொரு தனிமனிதரின் கல்வி, வேலைவாய்ப்புக்கான ஏணியாக மற்றெந்த இயக்கத்தையும்விடவும் அதீத பங்களிப்பைச் செய்த இயக்கமாக சுயமரியாதை இயக்கமும், அதன் பரிணாம வளர்ச்சியாக உருவெடுத்த திராவிட இயக்கமும் திகழ்கின்றன. ஆனால், சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக்காலம் அவ்வளவு இனிமையானது அல்ல. நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போடுவதற்கு சமமான காலம் அது. இயக்கத்தின் தலைவராக இருந்த பெரியார் மீதே செருப்பு வீசப்பட்டது, பாம்பு வீசப்பட்டது, மலம் வீசப்பட்டது என்றால் சாமானிய தொண்டர்களைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டுமா?

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகேயுள்ள கரடிக்குளம் என்னும் சிற்றூரில் சாமிநாதன் என்பவருக்கும் பொன்னாச்சி அம்மையாருக்கும் ஐந்தாவது மகனாக 1910-ஆம் ஆண்டு, பிறந்தவர் வேலாயுதம். திருச்சி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி கல்வியும், சாரணர் பயிற்சியும் முடித்தவர். மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கமும், இராமலிங்க அடிகளாரின் சன்மார்க்க சங்கம் வலியுறுத்திய சமத்துவ நெறிகளும் படிக்கும் காலத்திலேயே இவரை பெரிதும் ஈர்த்துள்ளன. அந்த ஈர்ப்பின் திசையில் ‘குடிஅரசு’ இதழை வாசிக்க, பெரியாரின் வழித்தடத்தில் தனது பாதையை அமைத்துக்கொண்டார். 1938-ஆம் ஆண்டு, முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தபோது, 28 வயது இளைஞராக போராட்டக்களங்களில் பங்கேற்றார்.

படித்து முடித்தவுடன் உடையார்பாளையத்திலேயே ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பள்ளியில் மாணவர்களுக்கு பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளையும், சுயமரியாதை இயக்கம் பேசும் சமூகநீதி அரசியலையும் பாடத்துடன் சேர்த்து புகட்டினார். ‘கல்வி ஒன்றுதான் சமூக விடுதலைக்கான வழி’ என்ற பெரியாரின் சிந்தனையை ஆழ்மனதில் ஏற்றிக்கொண்டவர், அப்பகுதியில் கிராமம் கிராமாகச் சென்று ஊர் மக்களிடம் பேசி, தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புங்கள் என மன்றாடி அவர்களை கல்வி நிலையங்களுக்கு அழைத்து வந்தார். அப்படி, மாடு மேய்த்துக்கொண்டிருந்த மாணவர்களையும் அழைத்து வந்து கல்வியில் அவர்களை ஈடுபடச் செய்ததன் விளைவாக பல மாணவர்கள் பட்டதாரிகள் ஆனார்கள்.

குறிப்பாக, அங்குள்ள உல்லியக்குடி கிராமத்தில் பின்னாளில் தொடக்கப்பள்ளி உருவானபோது அப்பள்ளியின் முதல் தலைமை ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டவர் மாரிமுத்து என்பவர். பள்ளிக்கு வராமல் மாடு மேய்த்துக்கொண்டிருந்த இவரை அழைத்து வந்து, கல்வியின் அவசியத்தை அவரின் பெற்றோருக்கும் உணர்த்தி படிக்கச் செய்தவர் வேலாயுதம். உழைக்கும் மக்களில் பெரும்பான்மையானோருக்கு கையெழுத்து கூட போடத்தெரியாத காலம் அது. கல்வி அவர்களுக்கு எட்டாத தொலைவுக்கு போயிருந்தாலும், அவர்களையும் பண்படுத்த வேண்டுமென்று சிந்தித்தார் வேலாயுதம். இரவு நேரங்களில் மாணவர்களுடன் சேர்த்து பெற்றோரையும் வரவழைத்து கூட்டங்கள் கூட்டி, நாடகங்கள் நடத்தி அவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஆசிரியராக கல்விச்சாலைக்குள் மேற்கொண்ட பணிகளுக்கு மத்தியில், பெரியார் தொண்டராகக் குடும்பத்திலும் சமூகத்திலும் பகுத்தறிவுப் பணியையும் தொடர்ந்தார். அன்றைய காலச்சூழலுக்கு புரட்சிகரமான பல செயல்களை செய்யத் துணிந்தார்... விளைவு... அவரையே விலையாகக் கொடுக்க நேர்ந்தது.

...பயணம் தொடரும்

## போதும் வறட்டு நடுநிலைவாதம்!

**இ**ந்திய ஜனநாயகத்தைச் சிதைத்துக்கொண்டிருக்கும் பாசிச பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் பண்பாட்டினை, வளர்ச்சியை, அமைதியை உறுதிப்படுத்தும் வகையிலும், கழகத்தின் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்து தேர்தலைச் சந்திக்கின்றன, சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகள். ஆனால், நடுநிலை என்கிற பெயரில் கம்யூனிஸ்ட் கட்சிகளை விமர்சிப்பவர்களுக்கு, அரசியல் விமர்சகரும் மூத்த பத்திரிகையாளருமான அ.குமரேசன் பதிலடி தந்துள்ளார்.

அவரது பதிவிலிருந்து “தேர்தல் மட்டுமே கம்யூனிஸ்ட்டுகளின் அரசியல் பயணம் இல்லை. ஆனால், தேர்தலைக் கீழே இறக்கி விட்டுவிட்டு தனித்த பயணம் என்ற அரசியலும் இல்லை. இந்தியாவின் இன்றைய அரசமைப்புச் சாசன லட்சியங்களை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, தேர்தல் அரசியலிலும் பங்களிக்கிறார்கள். நாட்டு மக்களின் எதிரியாக யாரைக் கருதுகிறார்களோ அந்தப் போராட்டத்திற்கான அணியில் இணைந்து பணியாற்றுகிறார்கள்.

இன்றைய தேர்தல் களம், அதன் ஆழம், அதற்கான கட்டாயங்கள் என்ற எந்த ஆய்வும் புரிதலும் இல்லாமல், ஆராயவும் புரிந்துகொள்ளவும் முயலாமல், சி.பி.எம், சி.பி.ஐ. இரண்டு கட்சிகளும் அணியிலிருந்து விலகி வந்துவிடட்டும் என்று சொல்வதன் மூலம், சட்டமன்றத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் குரல் ஒலிக்க வேண்டாம் என்றே சொல்கிறீர்கள். கம்யூனிஸ்ட்டுகளின் குரலில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் விவாதிக்கப்படுவதையும் அரசாங்கம் தலையிட்டுத் தீர்வு காண்பதையும் தடுக்கிற கைங்கரியம் இது.

‘தமிழக மக்களே, இந்த 23-ஆம் தேதி, இரு கட்சிகளின் 5+5 வேட்பாளர்களுக்கும் அமோகமாக வாக்களித்து சட்டமன்றத்துக்கு அனுப்பி வைத்திடுங்கள்’ என்று கேட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு கம்யூனிஸ்ட் பிரதிநிதியும் அங்கே தன்னுடைய தொகுதியின் தேவைகளுக்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் நலன்களுக்காகவும், ஏன் ஒட்டுமொத்த இந்தியாவின் மாண்புக்காகவும் செயல்படுவார்கள்.

‘கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுப்பெற வேண்டும்’ என்ற தொலைவைக் காட்டிக்கொண்டே, அருகில் அவர்களையும் அவர்கள் இணைந்திருக்கிற கூட்டணியையும், அவர்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிற மக்களையும் பலவீனப்படுத்தும் நோக்கம் நிறைவேறாது. போதும் இந்த வறட்டு ‘நடுநிலைத்தனம்’ எனக் கூறியிருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞர் நிகழ்ச்சியில் தொகுப்புரை!



கவிப்பேரொளி நீரை.அத்திப்பூ (சே.அப்துல் லத்தீப்)

2006-ஆம் ஆண்டு, மார்ச் 26-ஆம் தேதி, சென்னை நாரத கான சபா அரங்கத்தில், ‘பன்னாட்டுத் தமிழ் நடுவத்தின் அறிவியல் மாநாடு’ நடைபெற்றது. அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாநாட்டைத் தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார். தமிழ்நாட்டின் சிறப்புறு ஆளுமைகள் பலரும் பங்கேற்றனர். அந்த நிகழ்ச்சியின் தொடக்கம் முதல் நிறைவு வரை நிரல்படத் தொகுப்புரை செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. மறக்க முடியாத நினைவலைகளில் இன்றும்.

**– கவிப்பேரொளி நீரை.அத்திப்பூ (சே.அப்துல் லத்தீப்), அஞ்சல் பயிற்சி மைய மேனாள் உதவி இயக்குநர், நீர்முளை, திருக்குவளை, நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

104

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# தேர்தல் களம் 2026

# நிறைகுடங்கள் தளும்பாது!

**சும்மா இருக்கிற காற்றைக்கூட விட்டு வைக்காமல் ஊழல் செய்தவர்கள் தி.மு.க.வினர் என்று ‘குறைகுடம்’ எடப்பாடி பழனிசாமி தேர்தல் பிரச்சாரத்தில் குற்றம் சாட்டி இருக்கிறாரே?**

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றைகளை ஒதுக்கியது தொடர்பான விவகாரத்தில் இதையேதான் பா.ஜ.க.வும் சொன்னது. இதே டயலாக்கை ஒருவர் சினிமாவில் கத்திப் பேசினார். அதையே கத்திக் கத்தி பிரச்சாரத்தில் பேசுகிறார், ‘குறைகுடம்’ எடப்பாடி பழனிசாமி. காற்றோடு காற்றாகப் பரப்பப்படும் இந்த வதந்தியில் துளியளவுகூட உண்மையில்லை என்பது நீதிமன்றத்திலேயே நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், தகவல் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த தி.மு.க.வின் ஆ.ராசா அவர்கள், செல்போன் சேவைக்கான அலைக்கற்றைகளை ஏலம் எடுப்பதில் அரசியல் செல்வாக்கு கொண்ட சில நிறுவனங்களே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவதையும், அதனால் மக்களுக்கு கட்டணம் அதிகரித்துக்கொண்டே இருப்பதையும் உணர்ந்து, 2ஜி அலைக்கற்றைகளை முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்தார். இதனால், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளிடம் செல்வாக்குப் பெற்றிருந்த செல்போன் சேவை நிறுவனங்கள் ஆ.ராசாவுக்கு எதிராகப் பொய்களைக் கட்டமைக்கத் தொடங்கின. ஆனால், தலைவர் கலைஞரின் வழிகாட்டுதலில் ஆ.ராசா அவர்கள் மேற்கொண்ட முடிவால், இந்தியாவின் குக்கிராமங்களுக்கும் செல்போன் வசதி கிடைத்தது. எளிய மக்களும் செல்போனைப் பயன்படுத்தக்கூடிய நிலை உருவானது. உலகிலேயே செல்போன் கட்டணம் குறைவான நாடு இந்தியாதான் என்ற நிலைமையை உருவாக்கியவர், ஒன்றிய அமைச்சராக இருந்த ஆ.ராசா அவர்கள்.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றையை ஏலம் விடாமல், முதலில் வருபவருக்கு முன்னுரிமை என அளித்ததால், அரசுக்கு 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவ்வளவு பணமும் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாக பா.ஜ.க, அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் பொய்ப் பரப்புரை செய்தன.

இழப்பு வேறு; ஊழல் வேறு. மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் ‘கலைஞர் உரிமைத்தொகை’, ‘புதுமைப் பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’ ஆகிய திட்டங்களை மக்களுக்கான பயன் என்றுதான் சிறந்த நிர்வாகி கணக்கிடுவாரே தவிர, அரசாங்கத்திற்கு இழப்பு என்று கணக்கிட மாட்டார். 2ஜி வழக்கில் தவறாகக் கணக்கிட்ட சி.ஏ.ஜி. அதிகாரி, தனது பணி ஓய்வுக்காலத்திற்குப் பிறகு, பா.ஜ.க.வில் சேர்ந்தார் என்பதிலிருந்தே இதன் பின்னணியில் உள்ள சூழ்ச்சியைப் புரிந்துகொள்ள முடியும்.

காற்றில் ஊழல் என்று கம்பு சுற்றிய எவரும் அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ஒரு ரூபாய்கூட இழப்பு ஏற்படவில்லை என்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அமைச்சராக இருந்த கபில்சிபல் ஆதாரங்களுடன் தெரிவித்தார். உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பின்கீழ் டெல்லி பாட்டியாலா நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில், ஆ.ராசா குற்றமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தானே வாதாடி, தன்னை நிரபராதி என்று நிரூபித்து, தனது செயல்பாட்டால் பயனடைந்தது மக்கள்தான் என்றும், *I am Spectrum Raja* என்ற பெருமிதத்துடனும், தகத்தகாய சூரியனாக ஒளிர்ந்தவர் தி.மு.க.வின் ஆ.ராசா.

சொத்துக்குவிப்பு ஊழலுக்காக பெங்களூரு பரப்பன அக்கிரகார நீதிமன்றத்தால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு, சிறை சென்று, முதல்வர் பதவியை இழந்தது அ.தி.மு.க.வின் வரலாறு. நிறைகுடங்கள் தளும்பாது. குறைகுடங்கள் இப்படித்தான். வாய் இருப்பதற்காக எடப்பாடி பழனிசாமி எதையும் உளறக்கூடாது. அப்புறம், கொடநாடு மர்மங்கள் உள்பட அத்தனையும் வெளியே வரும்.

...வினா தொடரும்.

## கருவூலம்

### வெற்றி பெற்றுவிட்டது!

1967-ஆம் ஆண்டு, பிப்ரவரி. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின்போது கழகத்தின் எழுச்சியைப் பத்திரிகைகள் கணித்தன. ‘சென்னை நகரில் தி.மு.க.வின் செல்வாக்கு எவ்வளவு என்பதைப் பற்றி ஓட்டுப்பெட்டிதான் தீர்ப்பளிக்க முடியும். ஆனால், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பிரச்சாரங்களைப் பார்த்து தீர்ப்பளிக்க முடியும் என்றால், நகரில் தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்லி விடலாம்’ எனக் குறிப்பிட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900